

# பாலர் பாடல்

அழ. வள்ளியப்பா






## தமிழ் முரசு

பாலர்கள் படித்துக் களிப்பதற்கு ஏற்ற வகையில் எளிய தமிழில், இனிய கருத்துக்கள் அடங்கிய பாடல்கள் நிறைய உள்ளன. குழந்தைப் புத்தகங்கள் தமிழில் நன்கு வளர்ச்சி பெற்று வருகின்றன என்பதற்கு இந் நூல் தக்க சான்று.

## பொன்னி

இதில் சிறுவர்களுக்கான எளிய பாடல்கள் நிரம்பியுள்ளன. குழந்தைகளின் உள்ளம் அறிந்து எழுதியிருக்கிறார், ஆசிரியர் அழ. வள்ளியப்பா. பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வழங்கவேண்டிய நூல்.

## தினசரி

குழந்தைகள் விரும்பும் முறையில், பெரிய எழுத்துக்களில், அழகிய படங்களுடன், புத்தகத்தைச்சிறந்த முறையில் வெளியிட்டிருக்கிறார்கள். பாடல்கள் படிப்பதற்கு ரஸமாக உள்ளன.

## கல்கி

'அழுத பிள்ளை வாயை மூட அம்மாவுக்கு உதவும் மிட்டாய்' அபூர்வ ருசியுடன் விளங்குகிறது.

# பாலர் பாடல்

குழந்தைக் கவிஞர்

அழ. வள்ளியப்பா

தமிழ் நிலயம்

பாலர் மலர் நிர்வாகிகள்
புதுக்கோட்டை

முதல் வெளியீடு: ஆகஸ்ட் 1947.
இரண்டாவது வெளியீடு: மார்ச் 1950.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

அணா ஐந்து
(தபால் செலவு தனி)

உங்களுக்காக
வள்ளியப்பாவின்
பாட்டுப் புத்தகங்கள்.

★

* சிட்டுக் குருவி
* குழந்தைக் குரல்
* மலரும் உள்ளம்
* மல்லிகை (தயாராகிறது)

அச்சிட்டோர்:
கண்ணபிரான்,
புதுக்கோட்டை.

அருமைக் குழந்தைகளே,

இன்று தமிழ் நாட்டில் உங்களுக்காக நூற்றுக்கணக்கான பாடல்கள் எழுதி, உங்கள் மனத்தில் நிலையான ஓர் இடத்தைப் பெற்றிருப்பவர், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள். அவருடைய பாடல்கள் ஒவ்வொன்றிலும் உயர்ந்த கருத்துக்கள் இருக்கின்றன. எளிய நடையில், இனிய பாடல்கள் இயற்றுவதில் அவர் கைதேர்ந்தவர் என்பது யாவரும் அறிந்ததே.


அவர் எழுதிய முதல் பாட்டுப் புத்தகம் மலரும் உள்ளம். இரண்டாவதாக, அவருடைய பாட்டுக்களைத் தொகுத்து பாலர் பாடல் என்று வெளியிட்டோம். அதன்பின் அவருடைய பாட்டுக்கள் குழந்தைக் குரல், சிட்டுக்குருவி முதலிய புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன.


இப்பொழுது, பாலர் பாடல் இரண்டாவது பதிப்பாக வெளிவரு வதிலிருந்தே, அவருடைய பாடல் களின் மேல் உங்களுக்கு எவ்வளவு பிரியம் இருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது.

நல்ல வரவேற்பு அளித்து இரண் டாவது பதிப்பை வெளியிடத் தூண் டிய உங்களுக்கும், வெளியிட அனுமதி தந்த ஆசிரியரவர்களுக்கும் எங்கள் நன்றி.

புதுக்கோட்டை
15—3—50.

தமிழ் நிலையத்தார்,
'பாலர் மலர்' நிர்வாகிகள்.






# பாட்டும் பக்கமும்


1. கண்ணன் - - 7
2. கிளியே - - 11
3. அந்த இடம் - - 12
4. பறவைக் கப்பல் - - 14
5. உண்டு - - 15
6. இல்லையே ! - - 17
7. எங்கள் பாட்டி - - 19
8. கணபதியும் கந்தனும் - - 21

9. ரயில் வண்டி - - 25
10. மிட்டாய் - - 27
11. மோட்டார் வண்டி - - 29
12 பூனையார் - - 31
13. தீபாவளி - - 33
14. பட்டம் - - 35
15. மானின் விடுதலை - - 37
16. பள்ளிக்கூடப் பந்தயம் - - 41
17. பட்டணம் - - 44
18. மொத்தம் எத்தனை? - - 46






# கண்ணன்

கண்ணன் எங்கள் கண்ணனும்.
கார் மேக வண்ணனும்.

வெண்ணெய் உண்ட கண்ணனும்.
மண்ணை உண்ட கண்ணனும்.



குழலி ஞலே மாடுகள்,
கூடச் செய்த கண்ணனும்.

கூட்ட மாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனும்.

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனும்.



நஞ்சுப் பாம்பின் மீதிலே
நடனம் ஆடும் கண்ணனும்.

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனும்.

தூது சென்று பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனும்.




அர்ச்சு னர்க்குக் கீதையை

அருளிச் செய்த கண்ணனும்.

நல்ல வர்க்கே அருளுவான்,

நாங்கள் போற்றும் கண்ணனும்.





# கிளியே

பையன்: கிளியே, கிளியே, உன்னுடன்
கிளம்பி வரவா நானுமே?

கிளி: இறக்கை உனக்கு இல்லையே!
எப்ப டித்தான் பறப்பதோ?

பையன்: இறக்கை நீதான் கொண்டுவா.
இன்றே சேர்ந்து பறக்கலாம்.

கிளி: பழங்கள் தாமே தின்னலாம்;
பட்ச ணங்கள் இல்லையே!

பையன்: பட்ச ணங்கள் வாங்கவே
பணமும் கொண்டு வருவேனே.

கிளி: பணத்தை எந்த இடத்திலே
பாது காத்து வைப்பதோ?

பையன்: பணத்தைச் சிறகி னுள்ளேயே
பாது காத்து வைப்பேனே.

கிளி: பறக்கும் போது, ஐயையோ,
பணம் விழுந்து போகுமே!



# அந்த

அப்பா என்னை
அழைத்துச் சென்றார்,
அங்கு ஓரிடம்.

அங்கிருந்த
குயிலும், மயிலும்
ஆடித் திரிந்தன.

பொல்லா நரியும்,
புனுகு பூனை
எல்லாம் நின்றன.

குட்டி மான்கள்,
ஒட்டைச் சிவிங்கி
கூட இருந்தன.

குரங்கு என்னைப்
பார்த்துப் பார்த்துக்
குறு கு'றென்றது.

யானை ஒன்று
காதைக் காதை
ஆட்டி நின்றது.

முதலை தலையைத்
தூக்கிப் பார்த்து
மூச்சு விட்டது.

# இடம்

கரடி கூட
உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று.

சிறுத்தை ஒன்று
கோபங் காட்டிச்
சீறப் பார்த்தது.

அங்கு எங்கள்
அருகிலேயே
சிங்கம் நின்றது.

கரடி, சிங்கம்
புலியைக் கண்டேன்.
கண்டும் பயமில்லை!

சூரனைப் போல்
நின்றிருந்தேன்.
துளியும் பயமில்லை!

சென்ற அந்த
இடம் உனக்குத்
தெரியவில்லையா?

மிருகக் காட்சி
சாலை தானே,
வேறொன்றுமில்லை!





# பறவைக் கப்பல்


பாட்டி, பாட்டி, ஓடிவா.
பறவைக் கப்பல் மேலேபார்.
வீட்டு மேலே 'விர்'ரென
வேக மாகப் போகுதே!

காட்டைத் தாண்டிச் செல்லுமாம்.
கடல் கடந்து போகுமாம்.
பாட்டி யைப்போல் அண்ணாந்து
பலரும் பார்க்கப் பண்ணுமாம்.


பாட்டி, பாட்டி, இதனைப்போல்
பறவைக் கப்பல் முன்பெலாம்
பாட்டன், பாட்டி யாரேனும்
பார்த்த துண்டோ, சொல்லுவாய்?

பாட்டி, நீயும், நானுமே
பறவைக் கப்பல் ஏறியே,
வீட்டை விட்டுச் செல்லுவோம்.
வெளியி டாதே, ரகசியம்!


# உண்டு




கரும்பு இருக்கும்
இடத்திலே,
எறும்பு உண்டு,
மொய்க்கவே.



கண்ணன் தின்னும்
பண்டத்தில்,
வெண்ணெய் உண்டு,
முதலிலே.



தோசை சுட்டால்
'சுர்' ரென,
ஓசை உண்டு,
கேட்கவே.



மீசை வெள்ளை ஆகியும்,
ஆசை உண்டு, வாழவே.

துஷ்ட னான பையனால்,
கஷ்ட முண்டு, வீட்டிலே.





தெம்பில் லாத
பாட்டிக்கு,

கம்பு உண்டு,
கையிலே.

# இல்லையே





கொம்புள்ள
மிருகங்காள்!
கூடி ஓடி வாருங்கள்.

கொம்பெனக்கு
இல்லையே,
குத்திக் கீழே தள்ளவே!



வாலுள்ள மிருகங்காள்!
வந்து என்னைப் பாருங்கள்.

வாலெனக்கு இல்லையே,
வளைத்து நீட்டி ஆட்டவே!


இறகுடைய
பட்சிகாள்!
இங்கு என்னைப்
பாருங்கள்.

இறகெனக்கு
இல்லையே,
இஷ்டம் போலப்
பறக்கவே!

மூக்குள்ள பட்சிகாள்!
முன்னே வந்து பாருங்கள்.

மூக்கெனக்குக் கூர்மையாய்
முகத்தி லில்லை கொத்தவே!






# எங்கள் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி—எல்லாப்
பல்லும் போன பாட்டி.
கேட்கக் கேட்கக் கதைகள்-இன்னும்
கேட்கச் செய்யும் பாட்டி.

கடின மான பண்டம்—அதைக்
கடிக்கத் தெரியாப் பாட்டி.
படிப்பே யில்லாப் பாட்டி-ஆனால்,
பலவும் கற்ற பாட்டி.


விடுக தைகள் போட்டே-என்னை
விழிக்க வைக்கும் பாட்டி.
குடுகு டுவய தாச்சு-கையில்
கோல்பி டிக்கும் பாட்டி.



அப்பா அடித்துப் போட்டால்-என்னை
அணைத்துத் தேற்றும் பாட்டி.
தப்போ, தவறோ செய்தால்-என்னைத்
தடுத்துத் திருத்தும் பாட்டி.

சாய்ந்து மடியில் படுத்தால்-என்னைத்
தட்டிக் கொடுக்கும் பாட்டி.
நோய்கள் ஏதும் வந்தால்-அதை
நொடியில் போக்கும் பாட்டி.

யாருங் காட்டா அன்பை-என்றும்
எனக்குக் காட்டும் பாட்டி.
நூறு, நூறு ஆண்டு-இன்னும்
நூறு ஆண்டு வாழ்க.



# கணபதியும் கந்தனும்

தொந்திப் பிள்ளை யாருடன்,

துணைவ னாகக் கந்தனும்

பயணம் வைத்தான். இருவரும்

பகலில் எல்லாம் சுற்றினர்.

வழியில் பெரிய மலையிலே,

வாய்க்கு நல்ல பழங்களாய்

இருக்கும் செய்தி கேட்டதும்

ஏறப் பார்த்தார், இருவரும்.

'குடுகு' டென்று குமரனே
குதித்து மலையில் ஏறினன்.

மலையைக் கண்டு பிள்ளையார்
மலைத்துத் தொந்தி தடவினர்.

'களைப்பு அதிகம் ஆனது.
காலும் மெத்த வலிக்குது.

தம்பி நீபோய் வந்திடு.
தங்கி இருக்கி றேன்'னென



அரச மரத்து அடியிலே
அமர்ந்தார், தொந்திப் பிள்ளையார்.

காற்றுப் போட்ட சத்தத்தில்

காது கேட்காக் குமரனும்

சிறிது தூரம் சென்றுதான்

திரும்பிப் பார்த்தான், அண்ணனை.



அங்கும், இங்கும் பார்த்தனன்.

அண்ணன் வரவு கண்டிலன்.

உச்சி மலையில் ஏறினன்;

உற்று எங்கும் நோக்கினன்.


காண வில்லை அண்ணனே,
கண்ணுக் கெட்டும் வரையிலும்.

மலையின் மேலே நின்றிடின்
மரத்தின் கீழே தெரியுமோ?

பார்த்துப் பார்த்து உச்சியில்
பார்த்துக் கந்தன் நிற்கிறான்.

காத்துக் காத்துக் கணபதி
காற்று வாங்கும் காட்சி பார்!






போகுதுபார், ரயில் போகுதுபார்.
புகையினைக் கக்கியே போகுதுபார்.

‘குபுகுபு’ சப்தம் போடுதுபார்.
‘கூகூ’ என்றுமே கூவுதுபார்.

தூரமும், நேரமும் குறைவதுபார்.
துரிதமா யெங்குமே ஓடுதுபார்.

அறைஅறை யான வண்டிகள்பார்.
அவற்றிலே மனிதர் செல்வதுபார்.


ஸ்டேஷனி லெல்லாம் நிற்குதுபார்.
சிகப்புக் கொடிக்கே அஞ்சுதுபார்.

மலையைக் குடைந்துமே செல்லுதுபார்.
மையிருள் அதிலுமே ஓடுதுபார்.


பாலம் கடந்தது செல்லுதுபார்.
'பட, பட' 'கட, கட' என்குதுபார்.

பட்டண மாமா கடிதமெலாம்
பையிலே தூக்கி வருகுதுபார்.

காசைக் கரியுமே ஆக்காமல்,
கரியைப் புகையாய் விடுவதுபார்.



# மிட்டாய்



மிட்டாய் வாங்கிடுவாய்—தம்பி
 மிட்டாய் வாங்கிடுவாய்.



வட்ட வடிவ மான மிட்டாய்;
 வளர்ந்த நிலாப் போன்ற மிட்டாய்;
முட்டை வடிவ மான மிட்டாய்;
 முழுக்க, முழுக்க இனிக்கும் மிட்டாய்.

எண்ண எண்ணத் திதிக்கும் மிட்டாய் ;
எச்சில் ஊறச் செய்யும் மிட்டாய் ;
அண்ணன், தம்பி, தங்கை யோடு,
அப்பா கூடத் தின்னும் மிட்டாய்.

பல்லும், நாக்கும் வர்ணந் தீட்டிப்
பலவி தத்தில் காட்டும் மிட்டாய் ;
பல்லில் லாத பாட்டி கூடப்
பையப் பையச் சப்பும் மிட்டாய்.

குழந்தை யெல்லாம் வாங்கும் மிட்டாய் ;
கூடிக் கூடித் தின்னும் மிட்டாய் ;
அழுத பிள்ளை வாயைமூட
அம்மா வுக்கு உதவும் மிட்டாய்.






# மோட்டார் வண்டி

'பூம்-பூம்' என்ற சப்தமுடன்
போகுது மோட்டார் பார், பார், பார்.
'ஜாம்-ஜாம்' என்றே அதிலேறிச்
சவாரி செய்வோம் வா, வா, வா.


அப்பா காசு தந்திடுவார்.
அதனில் மோட்டார் வாங்கிடலாம்.
சுப்பா, நீயும் தோழர்களும்
சொகுசாய் ஏறிச் சென்றிடலாம்,

நான்தான் காரை விட்டிடுவேன்.
நாலா பக்கமும் சுற்றிடலாம்.
‘டாண்-டாண்’ பள்ளிக் கூடமணி
நம்மை அழைக்கச் சென்றிடலாம்.

பெட்ரோல் வாங்க ஒருகூப்பன்
பெறுவேன். ஆனல், எண்ணெயுமே
இஷ்டம் போல ஊரெல்லாம்
ஏறிச் சுற்றப் போதாதே!



# பூனையார்



பூனையாரே, பூனையாரே
போவ தெங்கே சொல்லுவீர்?

கோலிக் குண்டுக் கண்களால்
கூர்ந்து ஏனோ பார்க்கிறீர்?

பஞ்சுக் கால்க ளாலேநீர்
பையப் பையச் சென்றுமே

என்ன செய்யப் போகிறீர்?
எலி பிடித்துத் தின்னவா?

அங்கு எங்கே போகிறீர்?
அடுப்பங் கரையை நோக்கியா?


சட்டிப் பாலைக் குடிக்கவா,
சாது போலச் செல்கிறீர்?

சட்டிப் பாலும், ஐயயோ,
ஜாஸ்தி யாய்க் கொதிக்குதே.

தொட்டால் நாக்கைச் சுட்டிடும்.
தூர ஓடிப் போய்விடும்!




# தீபாவளி



காலைக் கோழி கூவும் முன்னே,
கண்ணை விழித்துக் கொள்ளலாம்;
எண்ணெய் தேய்த்து முழுகலாம்.

★



பட்ட ணத்தில் வாங்கி வந்த,
பட்டு ஆடை எடுக்கலாம்;
கட்டிப் பார்த்து மகிழலாம்.




பட்ச மான அப்பா விடம்,
பட்டாஸ் கட்டு வாங்கலாம்;
சுட்டுச் சுட்டுத் தீர்க்கலாம்.

★

தருவாள், அம்மா, பட்ச ணங்கள்,
தட்டு நிறைய வாங்கலாம்;
புட்டுப் புட்டுப் போடலாம்.







# பட்டம்

பறந்து மேலே சென்றிடும்
பட்டம் பார்,பார் தம்பியே.
பருந்து கூட இதனைப்போல்
பறந்தி டுமோ, சொல்லுவாய்?

வாலும் உள்ள பட்டமாம்;
வாலில் லாத பட்டமாம்.
மேலும், மேலும் செல்லுதே.
'விர்விர்' என்று கத்துதே.

பச்சை, நீல வர்ணங்கள்,
பலவி தத்தில் காணுதே.
உச்சி மீது வானத்தை,
ஓட்டை செய்யப் பார்க்குதே!

காற்ற டிக்கும் திக்கிலே,
கையும் சேர்த்தி ழுக்குதே,
பார்ப்போம் என்றே மேகத்துள்,
பார்,பார் தம்பி, ஒளியுதே!





# மானின் விடுதலை


**பையன்:**—புள்ளி மானே, கோபம்நீ
கொள்வ தேனோ கூறுவாய்?

**மான்:**— கட்ட விழ்த்து விட்டிடு.
காட்டை நோக்கிப் போகிறேன்

**பையன்:**—ஒருவி னாடி கூடநான்,
உன்னை விட்டி ருப்பேனோ?

மான்:— புறப்படு, நாம் இருவரும்
போகலாமே, காட்டிற்கு.

பையன்:—காட்டை நோக்கிப் போகவா!
கல்லும், முள்ளும் குத்துமே!
அம்மா, அப்பா, பாட்டியை
ஐயோ, விட்டு வரவா நான்?
இருட்டி னுல்வி ளக்கில்லே.
இரவில் சிங்கம் உறுமுமே.
ஆசைப் பட்ட பண்டத்தை
அம்மா வந்து தருவளோ?



**மான்:**—அப்ப டித்தான் எனக்குமே
அதிக கஷ்டம் இல்லையோ?

சுற்றத் தார்கள் வருவரோ?
துள்ளிச் சுற்ற முடியுமோ?

ஆசைப் பட்ட பண்டத்தை
அடைந்து தின்னக் கூடுமோ?


கழுத்து நோக என்னையார்
காட்டில் கட்டிப் போடுவார்?

★ ★ ★

இதனைக் கேட்ட அவன்மனம்
இளகிப் போச்சு, மெத்தவும்.

"ஐயோ பாவம், ஐயையோ,
அவிழ்த்து விட்டேன் ஓடிடு"

என்று கூறிக் கழுத்திலே
இருந்த கட்டை விழ்த்தனன்.




காட்டை நோக்கித் துள்ளியே,
காற்றைப் போல ஓடிடும்

மானைக் கண்டு அவனது
மனத்தில் இன்பம் துள்ளிற்றே!

# பள்ளிக்கூடப் பந்தயம்


பள்ளிக் கூடப் பந்தயம்
பார்க்க லாமே தம்பி நீ,
துள்ளி ஓடி வந்திடு,
தூரம் இல்லை கிட்டமே.




ரொட்டித் துண்டைக் கயிற்றிலே,
கட்டி விட்டுக் கையையும்
கட்டிப் போட்டால், வேகமாய்
எட்டி, எட்டித் தின்னுவோம்.


'ஒன்று, இரண்டு, மூன்று,உம்
ஓடு வீர்கள் விரைவிலே'
என்று ஒருவர் சொல்லுவார்.
எடுத்து விடுவோம், ஓட்டமே.

வட்ட மான கோட்டுக்குள்
வளைந்து நாங்கள் ஓடுவோம்.
கட்டப் பட்ட கண்ணுடன்
கண்டு பிடிப்பான், ஒருவனே



அங்கு கயிற்றை இழுப்பதும்
அகலம், உயரம் தாவலும்
இங்கு கூறி முடியுமோ?
எழுந்து வா நீ, சீக்கிரம்.





# பட்ட

பட்டணம் பெரும் பட்டணம்.
பலரும் கூடும் பட்டணம்.

கார் குதிரை வண்டிகள்,
கணக் கில்லாத பட்டணம்.

தண்ட வாள மீதுட்ராம்
வண்டி ஓடும் பட்டணம்.

ஆனை வைத்து ரிக்ஷாவில்,
ஆள் இழுக்கும் பட்டணம்.

மிருகக் காட்சி சாலையும்,
மெத்தப் பெரிய கோட்டையும்,

# ணம்

உயர மான கோர்ட்டுமே.
உள்ள தந்தப் பட்டணம்.

கப்பல் தங்கத் துறைமுகம்,
காற்று வாங்கக் கடற்கரை,

வீதி தோறும் பள்ளிகள்
விளங்கு கின்ற பட்டணம்.

பொட்ட ணத்தைக் கட்டியே
போகப் போறேன், பட்டணம்.

என்ன பட்டணம் தெரியுமா?
சென்னபட்டணம் தெரிஞ்சுக்கோ







# மொத்தம் எத்தனை?

பட்டணம் செல்ல ஒருராஜா
பயணம் வைத்தார். அவருடனே,
ஒன்றாய்ச் செல்ல, அவருடைய
ஒன்பது மனைவிகள் புறப்படவே,
ஒவ்வொரு மனைவியின் பின்னாலும்,
ஒன்பது குழந்தைகள் சென்றனவாம்.
ஒவ்வொரு குழந்தையின் பின்னாலே,
ஒன்பது நாய்கள் புறப்படவே,
ஒவ்வொரு நாயின் பின்னாலும்,
ஒன்பது குட்டிகள் சென்றனவாம்.

பட்டணம் செல்ல ராஜாவோடு
பயணம் வைத்தவர் மொத்தத்தில்
எத்தனை என்று சரியாக,
எனக்குச் சொல்வாய் 'பட்'டென்று?



தெரிந்திட வில்லை யானாலோ,
திருப்பிடு இதனைத் தலைகீழாய்!



விடை 7380

# சிறுவர் புத்தகங்கள்

## *பாலர் மலர் வெளியீடுகள்.*

**
****

1. *காந்தித் தாத்தா* .... 0—6—0
   *'சீதா'*
2. *சிட்டுக் குருவி* .... 0—5—0
   (குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா)
3. *பாலர் பாடல்* (2-ம் பதிப்பு) 0—5—0
   (குழந்தைக் கவிஞர்)
4. *வீராதி வீரன்* .... 0—5—0
   (சௌந்தர்யன்)
5. *நிமிஷக் கதைகள்* .... 0—5—0
   (பதிப்பாசிரியர், குழந்தைக் கவிஞர்)
6. *பாலர் கதைகள்* (3-ம் பதிப்பு) 0—4—0
   (பதிப்பாசிரியர், குழந்தைக் கவிஞர்)
7. *கண்டெடுத்த குழந்தை* 0—4—0
   (ஆர். கார்தன்)
8. *அண்டப்புளுகன்* .... 0—3—0
   (கோமாளி)

தமிழ்நிலையம்

புதுக்கோட்டை

ஈழகேசரி

பாலர்களுக்கென இயற்றப்பட்ட இவ்வினிய பாடல்களைச் சித்திரங்களுடன் பாலர் மலர் நிர்வாகிகள் வெளியிட்டிருக்கிறார்கள்.

தாய் நாடு

எளிய, இனிய, ஹாஸ்ய நடையுடன் அழகான படங்களுடன் பாடல்களை அச்சிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு ஐந்தணா கொடுக்கலாம்.

தொழிலாளர் உலகம்

குழந்தைகளுக்காக எளிய நடையில் கருத்துக்களை உள்ளடக்கி பாடல்கள் தீட்டுவதில் இன்று அழ. வள்ளியப்பா முன்னணியில் நிற்கின்றார். இப்பாடல்களை பள்ளி ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அணில்

சின்னப் பாப்பாக்களுக்குப் பிடித்தமான சின்னச் சின்னப் பாடல்கள் இயற்றுவதில் கெட்டிக்காரர், அழ. வள்ளியப்பா. அழகான பாட்டுக்களுக்கு ஏற்ற அழகான படங்களும் இதில் நிறைய இருக்கின்றன.

பாப்பா மலர்

குழந்தைகளுக்கென்றே பாடல்கள் இயற்றுவதில் கைதேர்ந்தவர் திரு. அழ. வள்ளியப்பா என்றால் அது மிகையாகாது. அவரது பாடல்கள் குழந்தை உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பதில் சந்தேகம் இல்லை.

குழந்தைக் கவிஞரின்

அடுத்த புத்தகம்

# மல்லிகை

(அழகிய குழந்தைப் பாடல்கள் அடங்கியது.)

தமிழ் நிலையம்

புதுக்கோட்டை.

கண்ணபிரான், புதுக்கோட்டை.